சொல்லப்பட்ட கருத்தும் பரிசீலிக்கப்பட்டது. இந்த நிறுவனத்தை நடத்த விடாமல் சிலபேர் முயற்சிகள் செய்கிறார்கள் என்பது சரியல்ல. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசுக்குத் தெரிவிக்கப்பட்ட காரணத்தால், உறுப்பினர்கள் கருத்துக்கு மதிப்பளித்து, மறுபரிசீலனை செய்கிற அளவுக்கு 10-ம் தேதி கூட்டம் நடைபெற்றது. அதில்தான் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட அறிக்கை போதுமானதல்ல, சரியாக இல்லை என்ற கருத்து சொல்லப்பட்டது. அரசாங்கம் ஒரு சிறு குழு அமைத்திருக்கிறது. அந்தக் குழு சீக்கிரமாக ஒரு அறிக்கை அரசுக்குத் தர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இந்தப் பரிசீலனையில் ஏற்கெனவே இருந்த நிலைமைகள் என்ன? இதனால் இந்த அளவிற்கு ஆர்டர்கள் நிறைய இருந்தும் வெளிநாடுகளிலிருந்து மொரிஷியஸ் போன்ற நாடுகளிலிருந்து ஆர்டர்கள் நிறைய இருந்தும் கூட நடத்தமுடியாமல் செய்தார்கள். இதை ஐ. டி. ஆர். ஆக்டின்படியோ அல்லது நேஷனலைசேஷன் ஆக்டின்படியோ எடுத்து நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? இடைக்காலத்திலே தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படவேண்டும். லே ஆஃப் காம்பன்சேஷன் கூட கிடைக்கவில்லை, 6 மாதமாக அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா?

The Hon. THIRU S. J. SADIQ PASHA: Government of India has called for a report on the management of the Company. It is felt that this would be useful for encouraging the Government of India to take over the management of the company, as there is possibility of the company being rehabilitated in the hands of Central Government than the State Government. To regulate that the Government of India should be requested to undertake investigation under Section 15 of the Industrial Development Act of 1951. மத்திய சர்க்காரையும் கேட்டுக் கொள்ளலாம் என்ற ஒரு முடிவும் இருக்கிறது.

English Tutors in Colleges

* 721 *Q*.—THIRU N.K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to replace about 170 teachers appointed this year to handle English classes in the Colleges; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ)— ஆம். இரண்டு ஆண்டுகளுக்கு குறைவாக தற்காலிகப் பணியில் உள்ள 69ஆங்கில போதனுசிரியர்கள் (எம்.ஏ.) முதுகலைப் பட்டப்படிப்பில் முதல் அல்லது இரண்டாவது வகுப்பில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறைவில்லாமல் பெற்று தேறி யிருக்க வேண்டும் என்ற கல்வித் தகுதியில்லாத காரணத்தால் 69 பேர்மட்டுமே மாற்றப்பட்டுள்ளார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ? நீக்கப்பட்டவர்களுக்கு மாற்று வேலை ஏதாவது கொடுக்கப்பட்டு இருக்கிறதா ? அல்லது திறமையுள்ளவர்கள் அந்தப் பகுதியில் போடப்பட்டிருக்கிறுர்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆங்கிலத் துறையில் ஆசிரியர்களாக உள்ளவர்கள் 50 எண்கள் பெற்றிருக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. 165 பேர்களுக்கு மேல் 50 எண்களுக்குக் குறைவாகப் பெற்றிருந்தவர்கள் இருந்தார்கள். குறைவாகப் பெற்றிருந்தவர்களிலே 2 ஆண்டுக்காலத்திற்குமேலே பணியாற்றியவர்கள் தொடர்ந்து இருந்து வருகிறுர்கள். இரண்டு ஆண்டுக்காலத்திற்கு உள்ளாகப் பணியாற்றியவர்கள்தான் முழுத் தகுதிபெற்றவர்கள் கிடைத்த காரணத்தினுல் நீக்கப்பட்டார்கள். அவர்களைத் தேர்வு ஆணைக் குழு எடுத்துக் கொள்வதாக இருந்தால் அவர்களைத் தேர்வு ஆணைக்குழுவிற்கு அனுப்பக்கூடிய வகையில் விதியைத் தளர்த்த ஆயத்தமாக இருக்கிறேம் என்று அறிவித்தோம். இரண்டு முறைகள் அப்படி 1972-லும் 1973-லும் நாம் தெரிவித்திருக்கிறேம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, சி பிளஸ் வாங்கியவர்கள் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கக் கூடிய முறையில் அவர்களுக்கு டியூட்டர்ஸ் வேலை அளிக் கலாம் என்று சொல்லப்பட்டு வேலை பார்த்து வருகிறுர்களே, ஆகவே 50 மார்க் என்று வாங்க வேண்டுமென்று, பி. வாங்க வேண்டுமென்று சொல்வது, கட்டாயம் அப்படி இருக்க வேண்டு மென்று சொல்வது நியாயமா ? ஆகவே அப்படியிருந்தால் அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக் கழகத்திலே அப்படிப்பட்ட விதியை வைத்திருக்கிறுர்கள். ஒரு பக்கம் நாம் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொல் கிறேம். எ., பி. என்று வாங்கியவர்கள் நல்ல முறையில் மற்ற வர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடிய நிலைமை இருக்கும். ஆகவேதான் 2-3-1970-லிருந்து நாம் அப்படிப் பட்ட அறிக்கை விட்டோம். 3-12-1969-க்கு முன்னுலே வந்தவர்களைத் தேர்வு ஆணைக் குழுவிற்குச் சிபாரிசு செய்தோம. 23-8-1972-ல் விழுக்காடு குறைந்திருந்தாலுங்கூட தேர்வு

ஆணைக் குழு அவர்களை எடுத்துக் கொள்வதாக இருந்தால் அதற்காக விதிவிலக்குத் தர ஆயத்தமாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்தோம். 28-7-1973-ல் மறுபடியும் போதுமான ஆசிரியர்கள் இல்லாததன் காரணமாக விழுக்காடு குறைந்திருந்தால் கூட அவர்களைத் தேர்வு ஆணைக்குழு எடுத்துக் கொள்வதாக இருந்தால் அவர்களுக்கு விதியைத் தளர்த்த ஆயத்தமாக இருக்கிறோம் என்று தெரிவித்தோம். இப்போது தாற்காலிகமாக இருக்கிற 165 பேர்களிலே 69 பேர்களை நாம் நீக்கி இருக்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவர்கள் தொடர்ந்து பணிபுரிகிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக பணிபுரிந்தவர்கள்தான் நீக்கப்பட்டிருக்கிறார்கள். தகுதிபெற்றவர்கள் இருப்பதால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி : மார்க் அதிகமாக வாங்கியதாலேயே அவர்கள் எல்லாம் மாணவர்களுக்கு நல்லமுறையிலே பாடம் சொல்லிக் கொடுப்பார்கள் என்ற முடிவுக்கு வந்துவிடமுடியாது. சில பேர்கள் ஏதோ எழுதி மார்க்குகளைப் பெற்றுவிடுவார்கள், அவர்களால் திறமையாகப் போதிக்க முடியாது, அதைக் கருத்தில் கொண்டு 50 விழுக்காடு என்ற நிலையை நீக்கிவிட அரசு முன் வருமா? அதோடு கூட வேலையில் ஏற்கனவே அமர்த்தப் பட்டவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது ஒருவருடைய தகுதியை, திறமையை, எண்ணிக்கையை அடிப்படையாக வைத்துத்தான் கணக்கிடுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போன்று குறைவாக எண்கள் வாங்கியவர்கள் எல்லாம் பயிற்றுவிப்பதில் கெட்டிக்காரர்கள் என்று எப்படி முடிவுக்கு வர முடியும்? அதே போல் ஏ வாங்கியவர்கள் எல்லாம் கெட்டிக்காரர்கள் இல்லையென்ற முடிவுக்கு எப்படி வந்துவிட முடியும்? இப்போது எண்ணிக்கை அடிப்படையிலேதான் முடிவு செய்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவர்கள்—தாற்காலிகமாகப் பணியாற்றுகிறவர்கள் பாதிக்கப்படவில்லை. இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளாகப் பணியாற்றியவர்கள்தான் நீக்கப்பட்டிருக்கிறார்கள், 165 பேர்களில் 69 பேர்கள்தான் நீக்கப்பட்டிருக்கிறார்கள், மற்றவர்கள் இருந்துவருகிறார்கள்.

Ananvilai Primary School

*722 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

Whether there are proposal under the consideration of the Government to upgrade the 'Ananvilai' Primary School in the Usarathuvilai Village Panchayat in Karungal Range, Kanyakumari district?